# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 08/2021 நாள்: 07.09.2021

**தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் தலைமையில் ஊரக உள்ளாட்சி தேர்தல், 2021 -ன்போது கோவிட் - 19 தொற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் இன்று (07.09.2021) நடைபெற்றது.**

புதியதாக உருவாக்கப்பட்ட 9 மாவட்டங்களான காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களுக்கான சாதாரணத் தேர்தல் மற்றும் தற்செயல் தேர்தல்கள் நடைபெறவுள்ள 28 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலின்போது கோவிட் - 19 தொற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார், இ.ஆ.ப., (ஓ) அவர்கள் தலைமையில் இன்று (07.09.2021) மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெறவுள்ள மாவட்டங்களில் கோவிட் - 19 தொற்று தொடர்பாக மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் தொற்று தொடர்பாக வாக்காளர்கள் மற்றும் அனைத்து தொடர்புடைய தேர்தல் பணியாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட வேண்டிய தடுப்பு உபகரணங்கள் கொள்முதல் மற்றும் வழங்குதல் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. மேலும், மாவட்ட வாரியாக தற்போது நிலவி வரும் கோவிட் - 19 தொற்று விவரங்கள் குறித்து ஆணையத்திற்கு விரிவாக மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். இது குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிட அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் தொடர்புடைய சுகாதாரத் துறை அலுவலர்களை அறிவுறுத்திட கேட்டுக் கொள்ளப்பட்டது.

..2..

ஊரக உள்ளாட்சி தேர்தல் நடைபெறும் 9 மாவட்டங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கோவிட் - 19 தடுப்பூசி வழங்க தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டது. கோவிட் - 19 தொற்று தொடர்பாக தேவையான அனைத்து உரிய தடுப்பு நடவடிக்கைகளுக்கும் மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையச் செயலாளர் திருமதி எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் திரு.தீபக் ஜேக்கப் இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் டாக்டர். செல்வவிநாயகம், முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு க. அருண்மணி, முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி கு. தனலட்சுமி, மற்றும் மருத்துவம் -மக்கள் நல்வாழ்வுத் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

7/9/2021

மக்கள் தொடர்பு அலுவலர்